இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 09-03-2025

# அதை முதலில் சொன்னவர் அவர் அல்ல!

“ஆரியர்கள் வந்தேறிகள் என்று இங்கே திணிக்க முயற்சி செய்தார் ஈ.வெ.ரா.” என்று அலறி இருக்கிறார் ஆளுநர் ரவி. ‘ஆரியர்கள் வந்தேறிகள்’ என்று முதலில் சொன்னது பெரியார் அல்ல. அவர் மட்டுமே சொன்னதும் அல்ல!

பெரியாருக்கு முன்னே பலரும் இதனைச் சொல்லி இருக்கிறார்கள். பெரியாருக்குப் பிறகும் திராவிடர் இயக்கத்தவர் நீங்கலாக பலரும் இதனை ஒப்புக் கொண்டும் இருக்கிறார்கள். எனவே, இதனை பெரியாரின் கூற்றாக மட்டும் சொல்லி அரசியல் செய்தியாக மடைமாற்றம் செய்யப் பார்க்கிறார் ஆளுநர்.

**தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம் 1925 ஆம் ஆண்டு தொடங்கியது. அதற்கெல்லாம் பல ஆண்டுகளுக்கு முன்பே - 1905 ஆம் ஆண்டே இதனைப் பேசி இருப்பவர் தனித்தமிழ்த் தந்தை என்று போற்றப்படும் மறைமலையடிகள். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழாவில் ‘பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும்’ என்ற தலைப்பில் அடிகள் உரையாற்றி இருக்கிறார். இந்த உரையானது 1906 ஆம் ஆண்டு புத்தகமாக வெளியாகிவிட்டது.**

* ஆரியர் வருவதற்கு முன்னரே தமிழர் மிக்க நாகரிகமுடையராயிருந் தனரென்பது இருக்குவேதத்தினாலே இனிது அறியப்பட்ட தொன்றாம்.

* ஆரியர் சிந்து நதிக்கரையில் வந்து குடியேறிய காலத்தில்,

உள்நாட்டில் இருந்த தமிழர் ஏழுவகை அரண்மனைகளும், தொண்ணூறு கோட்டைகளும் உடையராய் வாழ்ந்தனரென இருக்குவேதம் உரை தருகின்றது.

* ஓரிடத்தும் நிலைபெறமாட்டாது திரிதரு வாழ்க்கை யுடையராய் இந்தியாவினுட் புகுந்த ஆரியர் கங்கையாற்றுக் கரைப் பக்கங்களில் நிலைபெற்ற வாழ்க்கை நடாத்திச் செங்கோல் ஓச்சிய தமிழ் மக்களால் நெறிப்படுத்தப்பட்ட இலக்கண முறைகண்டு தாமும் உயிர்மெய் எழுத்துகளை முறைப்படுத்தினாரென்று துணிக.

* **ஆரியர் வருஞான்று, தமிழர் அரசியல் முறைபிழையாது வாழ்ந்தனராகலின் அவரை ஆரியர் ‘அசுரர்’ என்று பெயரிட்டு வழங்கினார். இருக்கு வேதத்தின் முதல் ஒன்பது மண்டிலங்கள் முதுவதூஉம் ‘அசுர’ எனும் சொல் உள்ளது.**

* ஆரியர் இந்தியாவிற் புகுந்தபின் தமக்கு முன்னே அங்கு வாழ்ந்து வருந் தமிழ் ஆசிரியர் கண்ட அவ்வெழுத்து முறையைப் பிரதி செய்து கொண்டார் என்க.

* ஆரியர் இந்தியாவிற் புகுந்தபின் தமிழருடைய நாகரிக முதிர்ச்சியினையும், அவர் தாங்கருதிய பொருளை எழுத்திவிட்டுப் பொறித்தலுங் கண்டு தாமும் தம்முடைய பாட்டுக்களைப் பண்அடைவுபட வகுத்தஞான்று எழுதுமுறை கண்டறிந்தார்.

- இப்படிப் பேசி இருக்கிறார் தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகள். பெரியார் இப்படி எல்லாம் பேசத் தொடங்குவதற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பே பேசியவர் அடிகள்.

இது ஏதோ தமிழ்நாட்டில் தமிழ் வெறியில் மறைமலையடிகளைப் போன்றவர்கள் சொன்னது மட்டுமல்ல; இந்தியாவின் பல்வேறு அறிஞர்களும் இப்படித் தான் எழுதி இருக்கிறார்கள்.

இந்தியாவின் புகழ்பெற்ற அறிஞர்களில் ஒருவர் ராகுல சாங்கிருத்தியாயன். ‘ராகுல்ஜி’ என்று இவரை அழைப்பார்கள். ‘வால்காவில் இருந்து கங்கை வரை’ என்ற உலகப்புகழ் பெற்ற நூலை எழுதியவர் அவர். உத்தரப்பிரதேச மாநிலத்தில் வைதிகத்தில் ஊறிய கோவர்த்தன் பாண்டே - குல வந்தி என்ற பிராமணக் குடும்பத்தில் 1893 ஆம் ஆண்டு பிறந்தவர். இவர் இந்தியா முழுவதும் சுற்றியவர். 12 மொழிகளில் எழுத, பேச இவருக்குத் தெரியும். தமிழும் தெரியும். தமிழ்நாட்டுக்கும் வந்து சென்றுள்ளார். சென்னைக்கு அருகே திருமழிசையிலும் சில காலம் வாழ்ந்திருக்கிறார். அவர் எழுதிய வரலாற்று நூல்: ‘ரிக்வேத ஆரியர்கள்’ என்பது ஆகும்.

இந்தியாவின் மேற்கில் இருக்கும் மத்திய தரைக்கடற்கரை நாடுகளில் இருந்து ஆப்கானிஸ்தான் வழியாகச் சிந்து நதி - சப்த சிந்து நதி தீரத்தில் வந்து (கி.மு.1500க்குப் பிறகு) குடியேறியவர்கள் ஆரியர்கள் என்றும், அவர்கள் வரும் போது வளமான நாகரிகத்துடன் வாழ்ந்துவந்த மக்களை வென்று வீழ்த்திக் கிழக்கே நோக்கி கங்கை நதி தீரம் வரை ஆரியர்கள் பரவினார்கள் என்றும் சொல்கிறார். ஆரியர்கள் வரும்போது வளமான நாகரிகத்துடன் வாழ்ந்தவர்களை ‘தஸ்யூக்கள், திராவிடர்கள்’ என்றும், அந்த இடம் தான் ‘சிந்துச் சமவெளி’ என்றும் சொல்கிறார். சொன்னவர் ராகுல்ஜி.

**இந்தியாவுக்குள் நுழைந்ததுமே ஆரியர் முதலில் திராவிடர்களை எதிர் கொள்ள நேர்ந்தது, பின்னர் இமயப் பள்ளத்தாக்கில் பிரவேசித்ததும் ‘கிர்’ இனத்தாருடன் மோதவேண்டியதாக இருந்தது என்கிறார் ராகுல்ஜி. ‘அவன் பெரிய கிராதகன்’ என்று சிலர் சொல்வது இந்த ‘கிர்’ இனத்தார் மீதான பழிச்சொல் தான். திராவிடர்கள் என்று சொன்னால் ஆரியர்களுக்குக் கோபம் வருவது இதனால்தான்!**

மத்திய தரைக்கடல் நாடுகளிலும் அதனைச் சுற்றி ஐரோப்பிய நாடுகளிலும் வாழ்ந்திருந்த ஆரிய இன மக்களின் ஒரு பிரிவினர் பேசிய மொழியே பிற்காலத்தில் செம்மைப்படுத்தப்பட்ட சமஸ்கிருதம் என்றும், ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்த பின்னர் தான் ரிக் வேதம் எழுதப்பட்டது என்றும் ராகுல்ஜி சொல்கிறார். ரிக் வேதத்தை இயற்றிய ரிஷிகளான பரத்வாஜரும், வசிஸ்டரும், விசுவாமித்திரரும் ஆரியர் வருகைக்கு 300 ஆண்டுகளுக்குப் பிந்தியவர்கள் என்றும் இவர் சொல்கிறார்.

**‘ஆரியர்களை ஈ.வெ.ரா. கொச்சைப்படுத்தினார்’ என்று ஆளுநர் ரவி சொல்கிறார். ஈ.வெ.ரா. கொச்சைப்படுத்தவில்லை. அவர்களின் ரிக்வேதத்திலே சொல்லப்பட்டிருப்பதைத் தான் பெரியார் சொன்னார் என்பதை ராகுல்ஜி புத்தகத்தின் (நான்காவது அத்தியாயம்) மூலமாக அறியலாம். ( நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம், ராகுல்ஜி நூலை தமிழ்ப்படுத்தி வெளியிட்டுள்ளது. ரிக் வேதத்தை ‘அலைகள் பதிப்பகம்’ வெளியிட்டுள்ளது)**

ராகுல்ஜியில் நூலை ஆர்.என்.ரவி, இந்தியில் படிக்கலாம். ஏனென்றால் ராகுல்ஜி எழுதியது இந்தியில்தான். ஆரியர்கள் வந்தேறிகள் என்று பெரியாருக்கு முன்னே பல வரலாற்றுப் பெரியார்கள் சொல்லி இருக்கிறார்கள் என்பதை ஆளுநர் அறியட்டும்.

**பெரியார் தான் அறிவுக்கருவூலமாக இருந்த இந்தச் செய்திகளை எல்லாம் அரசியல் களத்தில் முதன்முதலாக இறக்கினார். ‘எனது புத்தகங்கள் சுயமரியாதை இயக்கம் தொடங்கிய பிறகு அதிகம் விற்றது’ என்று மறைமலையடிகள் சொல்வது இதனை மனதில் வைத்துத் தான். ஆரிய ஆட்டங்களை அம்பலத்தில் ஏற்றினார் என்பதால் தான் இறந்து அரை நூற்றாண்டு ஆன பிறகும் பெரியார் பேரைச் சொன்னாலே நடுங்குகிறார்கள். ரவியை வைத்து ஆட்டம் காட்ட நினைக்கிறார்கள்.**

ஆளுநர் பேசட்டும். முதலமைச்சர் சொன்னது போல, ‘அவர் தான் நமக்கான நல்ல பிரச்சாரகர்’.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.3.2025) இனமானப் பேராசிரியர் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி, சென்னை அண்ணா அறிவாலயத்தில் வைக்கப்பட்டுள்ள பேராசிரியர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, பேராசியர் அவர்களின் புதல்வர் அ. அன்புச்செல்வன், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் ஆஸ்டின், ப.தாயகம் கவி, தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி எஸ்.முருகன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் அ. வெற்றியழகன், இ.பரந்தாமன், மரு. நா.எழிலன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

### நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பில் பாதிப்படைய வாய்ப்புள்ள

# 7 மாநிலங்களில் 29 கட்சிகளுக்கு கடிதம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அனுப்பினார்!

**சென்னை, மார்ச் 9-**

**நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பில் பாதிப்படைய வாய்ப்புள்ள 7 மாநிலங்களில் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் உள்ள 29 கட்சிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

அதன் விபரம் வருமாறு:-

கேரள மாநில பாரதிய ஜனதா கட்சியின் குன்னும்மல் சுரேந்திரன், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் எம்.வி.கோவிந்தன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பினாய் விஸ்வம், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் கும்பக்குடி சுதாகரன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் பாணங்காடு செய்யித் சாதிக் அலி ஷிஹாப் தங்கல், கேரளா காங்கிரஸ் கட்சியின் பி.சி.ஜோசப், கேரளா காங்கிரஸ் (மணி) கட்சியின் ஜோஸ் கே.மணி, புரட்சிகர சோசலிஸ்ட் கட்சியின் ஷிபு பேபி ஜான்;

ஆந்திரப்பிரதேச மாநில தெலுங்கு தேசம் கட்சியின் பல்ல சீனிவா சராவ், ஜனசேனா கட்சியின் கே.பவன் கல்யாண், பாரதிய ஜனதா கட்சியின் திருமதி தகுபதி புரந்தேஸ்வரி;

தெலுங்கானா மாநில இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் மகேஷ் குமார் கவுட், பாரத் ராஷ்டிர சமிதி கட்சியின் கே.சந்திரசேகர ராவ், அகில இந்திய மஜ்லிஸ்இத்தேஹாதுல் முஸ்லிமீன் கட்சியின் அசாதுதீன் ஒவைசி, பாரதிய ஜனதா கட்சியின் ஜி.கிஷன் ரெட்டி;

கர்நாடகா மாநிலத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் டி.கே.சிவகுமார், ஜனதா தளம் (மதச்சார்பற்ற) கட்சியின் ஹெச்.டி.குமாரசாமி, பாரதிய ஜனதா கட்சியின் பி.ஒய்.விஜயேந்திரா; மேற்கு வங்காள மாநிலத்தின் பாரதிய ஜனதா கட்சியின் டாக்டர். சுகந்தா மஜூம்தார், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் முகமது சலீம், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சுபாங்கர் சர்க்கார்;

ஒடிசா மாநில பாரதிய ஜனதா கட்சியின் மன்மோகன் சாஹல், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் பக்த சரண் தாஸ்;

பஞ்சாப் மாநில இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் அமரீந்தர் சிங் ராஜா வாரிங், ஆம் ஆத்மி கட்சியின் அமன் அரோரா, சிரோன்மணி அகாலி தல் கட்சியின் பல்வீந்தர் சிங் பந்தர் ஆகியோருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

### “அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நாங்கள் நாடகம் ஆடினோம்” என்றால்

# ஜெயக்குமார் அந்நாடகத்தில் வில்லன் வேஷம் போட்டாரா?

## காஞ்சி பொதுக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கேள்வி!

காஞ்சிபுரம், மார்ச் 9 -

“அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நாங்கள் நாடகம் ஆடினோம்” என்றால் அ.தி.மு.க. ஜெயக்குமார் அந்நாடகத்தில் வில்லன் வேஷம் போட்டாரா? என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கேள்வி எழுப்பியுள்ளார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், காஞ்சிபுரம் மாநகரம், 2வது பகுதிக் கழகத்தின் ஏற்பாட்டில் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் 72வது பிறந்த நாளினை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி மாபெரும் பொதுக்கூட்டம் 6.3.2025 அன்று மாலை, சின்ன காஞ்சிபுரம், விஷ்ணுகாஞ்சி காவல் நிலையம் அருகில் உள்ள யாக சாலை மண்டபம் அருகில், காஞ்சி புரம் மாநகரச் செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன் தலைமையில், இப்பொதுக்கூட்டத்தை ஏற்பாடு செய்த 2வது பகுதிக் கழகச் செயலாளரும் - 2வது காஞ்சிபுரம் மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவருமான எஸ்.சந்துரு வரவேற்புரையாற்றிட, பகுதிக் கழக நிர்வாகிகள் முன்னிலையில், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல். ஏ., சட்டத் துறை இணைச் செயலாளர் சூர்யா வெற்றிகொண்டான், காஞ்சிபுரம் நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் சிறுவேடல் க.செல்வம், கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், மாவட்டப் பொருளாளர் சன் பிராண்ட் கே.ஆறுமுகம் உள்ளிட்டோர் உரையாற்றிய பின்னர், இறுதியாக கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் ஆற்றிய சிறப்புரை வருமாறு : -

தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையினால் தமிழ்நாட்டிற்கு ஏற்படப்போகும் பேராபத்தைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது.

முதலமைச்சர் அவர்களால் கூட்டப்பட்ட அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இந்த அனைத்துக் கட்சிக் கூட்டமானது தலைமைச்செயலகத்தில் காலை 10 மணிக்குத் தொடங்கி மதியம் 2.30 வரைக்கும் நடைபெற்றது.



இக்கூட்டத்தில் கலந்து கொள்ள 63 தமிழக அரசியல் கட்சிகளுக்கு அரசின் சார்பில் அழைக்கப்பட்டிருந்த நிலையில் 58 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**வரலாற்று நிகழ்வு!**

இந்திய வரலாற்றிலேயே இது ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வாகும். தி.மு.க. சார்பில் நானும், எம்.பி. வில்சன் ஆகியோர் கலந்து கொண்டோம். இக்கூட்டத்தில், கழகத் தலைவர் அவர்கள் என்னை முதன்முதலாக உரையாற்ற அழைத்தார். காரணம், நான் சுருக்கமாக பேசுவேன் என்கிற காரணத்தால், அழைத்தார். நானும் ரத்தின சுருக்கமாக பேசிவிட்டு அமர்ந்தேன்.

கழகத் தலைவர் அவர்கள் உரையாற்றி முடித்தவுடன், அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஜெயக்குமார், இதில் சிறிய திருத்தம் செய்யணும்னு கோரிக்கை வைத்தார். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர் சொல்வதை கேட்பதா..? என்று ஈகோ பார்க்காமல் சொல்வது அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த ஜெயக்குமார் என்று கௌரவம் பார்க்காமல், தமிழ் மக்களுக்கும் - தமிழ்நாட்டுக்கும் எது நன்மை பயக்கும் என்ற ஒரே உயரிய கொள்கையை மனதில் நிறுத்தி, உடனடியாக அரசு தலைமைச் செயலாளரை அழைத்து, ஜெயக்குமார் சொன்ன வார்த்தையை சேர்த்து, திருத்தி கொண்டு வாருங்கள் என்று சொல்லி, திருத்தியதை கூட்டத்தில் வைத்து எல்லாக் கட்சி பிரதிநிதிகளின் ஒப்புதலையும் பெற்ற பெருந்தன்மைமிக்க - ஒப்பற்ற தலைவர் நம் கழகத் தலைவர் அவர்கள்.

அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஜெயக்குமார் பேசி, திருத்தத்தையும் சொல்லி அதனை கழகத் தலைவர் அவர்கள் ஏற்று, திருத்திய தீர்மானத்தை கூட்டத்தில் வைத்து ஒப்புதல் பெற்ற பின்னர், வெளியே வந்த அ.தி.மு.க. ஜெயக்குமார் செய்தியாளர்களை சந்திப்பின்போது “நாடகம் ஆடினார்” என்று பேட்டி அளித்திருக்கிறார். நான்கரை மணி நேரம் கூட்டத்தில் அமர்ந்து தனது மற்றும் தனது கட்சியின் கருத்தையும் சொல்லி, திருத்தத்தையும் சொல்லிட்டு, வெளியே வந்து “நாடகம் ஆடினார்” என்று சொல்லி இருக்கிற ஜெயக்குமாரை, இக்கூட்டத்தில் வாயிலாக கேட்கிறேன். நாங்கள் நாடகம் ஆடினோம் என்றால் ”அந்நாடகத்தில் நீ வில்லன் வேஷம் போட்டியா..?” இல்ல ”காமெடி வேஷம் போட்டியா...?” என்று கேட்கிறேன். நாலு மணி நேரம் கூட்டத்தில் அமர்ந்து, பேசிவிட்டு, சிரித்துவிட்டு, வெளியே வந்து “நாடகம் ஆடினார்கள்” என்றால் அந்த டிராமாவில் நீ வில்லனாக நடித்தாயா...? இல்ல... காமெடியனாக நடித்தாயா...?” என்று அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமாரை நோக்கி கேள்வி எழுப்பினார்.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி கேள்வி எழுப்பினார்.

# மூன்று முதல்வர்கள் - ஒரு வேறுபாடு!







**முதலமைச்சரின்**
**72ஆம் பிறந்தநாளை**
**அமைச்சர் சேகர் பாபு**
**கொண்டாடினார்**

**நானும் வாழ்த்துரைத்தேன்**

**“பெருந்தலைவர் காமராசர்**
**முத்தமிழறிஞர் கலைஞர்**
**தளபதி ஸ்டாலின் என்ற**
**மூன்று முதல்வர்களும்**
**செயல் வீரர்கள்.**

**ஆனால் முக்கியமான**
**ஒரு வேறுபாடு உண்டு**

**ஆகட்டும் பார்க்கலாம்**
**இது காமராசர்**

**ஆயிற்று பார்த்தாயா**
**இது கலைஞர்**

**ஆயிற்று;**
**அடுத்தது பார்த்தாயா**
**இது மு.க.ஸ்டாலின்”**
**என்று வகுத்துச்சொன்னேன்**

**ராஜா**
**அண்ணாமலை மன்றத்தின்**
**சுவர்கள் அதிரும்படி**
**கரவோசை எழுந்தது**

**உடன்**
**ஓய்வுபெற்ற நீதியரசர்கள்**
**கே.என்.பாஷா**
**ஜி.எம்.அக்பர் அலி**
**கே.சந்துரு**

**விழா**
**உணர்ச்சிமயமாய் இருந்தது**



கவிப்பேரரசு
வைரமுத்து